தோற்றல் = பிறப்பு, தோன்றல், வலி, தோகை, மயில், தொங்கல்

தோற்றி = முதலாக

தோன்றல் = பிள்ளை, சத்துருக்கள், அழ சுவாமி, நாயகன், முல்லைத் தலைவன், புத்திரன்

தோன்றி = செங்காந்தன்

தோன்றிகர் = வாணியர்

தோன்றுதல் = பிரகாசித்தல்

நக்கரிக்கை = நகருகை

நக்கல் = நகை, தீண்டல்

நக்கன் = அருக்கன், ருத்ரன்

நக்குண்டார் நாவெழார் = அல்பமாய் அல்பமொருவும் கையிலே வாங்கியுண்டா வாங்கியுண்ட ஒன்றுஞ்சொல் மாட்டார்

நகம் = மலை, மரம், உதிரம்

நகடு = வியாதி, சோபை, பேகணிப்பு, தேசல்

நகில் = முலை

நகு = சிரிப்பு

நகுகை = சிரிக்கை

நகுதல் = சிரித்தல், ஒழித்தல்

நகை = ஆலத்தி, இடைச்சி, மகிழ்வு, ஒளி சிரிப்பு, பல்

நங்குரம் = சீனிக்கலப்பை

நங்கை = பூர்ணை

நச்சு = நஞ்சு

நச்சுப்பூண்டு = நஞ்சான பூண்டு

நச்சுவனை = நஞ்சையுடைத்தானவனை

நச்சுவார் = ஆசையுடையார்

நசை = ஆசை

நட்ட = பண்விசேஷம், பாஷை

நட்டம் = நடு

நட்பாக = சுபாவமாக

நட்பு = சிநேகம்

நடம் = நடனம், கூத்தும்

நடமாட்டம் = கூத்தாட்டம்

நடவை = நோய், கூத்தாடுவிக்கிற நோய், துக்கம், பொய், வஞ்சனை, நுடக்கம்

நடவை = வழி

நடு = மருங்கு, மத்யம்

நடுவிற்பெருங்குடி = கிராமணி

நடை = நடக்கை, பரிக்கை, கூத்து, செல்வம், ஒழுக்கம், வழி, சந்தஸ், சுபாவம்

நடை கொள்ளுகை = அவ்வியாபாரம்

நடைச்சக்கரவத்து = நடைக்கு விருதூதுகை

நண்ணுதல் = அணைதல்

நண்பகல் = உச்சிக்காலம்

நணுகை = கிட்டுகை

நதி = ஆறு, மாலை

நந்தல் = ஆக்கம், கேடும்

நந்தனர் = இடையர்

நந்தி = சிவன், ரிஷபம்

நந்தினம் = சங்கம்

நந்து = நத்தை

நந்துகை = நசிக்கை

நந்தை = துக்கம்

நப்பிளிக்கை = சிறிக்கை

நம் = பிரசித்தி

நம்பி = பூர்ணன், மிடுக்கன், விரும்பி, மரியாதை

நம்புதல் = விரும்புதல்

நம்மன் = பூதங்கள்

நமஸ்காரமாமித்தனை = அவஸ்யாமித்தனை

நமன்று = வணங்கி, சேவித்து

நமுக்கை = மிருதுவாகை, குழைகையும்

நமுக = உருக, குழைய, மிருதுவாக

நமுகை = உருக்குகை, குழைகை, மிருதுவாகை

நனமகை = கிறிகிக்கை

நயக்கை = ஆசைப்படுகை

நயப்பிக்கை = நிர்வகிக்கை

நயம் = இன்பம், நியாயம், விருப்பம், சப்தாதி விஷயமும்

நயவேன் = ஆசைப்படேன்

நரகம் = யமன்தண்டல், சம்சாரம், அகலுகை

நரம்பு = நாடி, தந்திரி

நரலை = கடல்

நரை = ஐரை

நரைதிரை மாறுகை = நரை ஐரை, திரை மாறுகை, ஆவது, யௌவனத்தை பஜிக்கையென்றபடி

நல்கல் = கொடுத்தல் நல்குதல் கொடுத்தல், தருதலும்

நல்குதிரை = இறுமாந்திருக்கை

நல்வினை = சுகிர்தம்

நலங்குகை = முசுங்குகை

நலம் = பக்தி, யோக்யதை, சிநேகம், குணம்

நலிவு = நாசம்

நலுகல் = கொடுத்தல்

நவம் = கூற்று, புதுமை, பூமி, பாம்பு, பழைமை, கேண்மை, தொண்டு, கார்காலம்

நவியம் = கோடாலியும், மழுவும்

நவிலுகை = வளர்க்கை நண்ணுகை, கிருபை சொல்லுகை, பரிச்சயம் பண்ணுகை பயிலுகை

நவின்று = சொல்வு

நள் = நடு, செறிவு, இருள், தேள், கொடுத்தல், சப்தானுகாரம்

நள்ளீ = பொன்னும், வாவியும்

நள்ளு = செறிவு

நள்ளுகை = கிட்டுகை, செறிகை

நள்ளேன் = கிட்டேன்

நள்ளை = செறிவு

நளிர் = குளிர், வெறிப்பு, பெருமை, செறிவு

நற்குரை = ஒத்தாரில்லாமை

நற்கேடு = சுபாவங்கெடுகை

நறு = வாணியம்

நறுகுமுறுகை = பொறாமை, சப்தானுகாரம்

நறுநாற்றம் = சுகந்தம்

நன்மை = யோக்யதை

நன்னுகு = மிகுதி

நன்னை = உபகாரம்

நனவு = தெளிவு, இயலுகை, நடத்துகை

நனி = சீற்றம், குளிர்ச்சியும்

நனுங்குகை = உத்யோகிக்கை

நனை = கள், மது, பூமொட்டும்

நா = நாக்கு

நாக்குவளைக்கை = தூஷிக்கை

நாகப்பூ = நாககேசரம்

நாகம் = சுவர்க்கம், ஆகாசம், அனந்தன், நாகமும், சுரபுன்னை,

நாகபு பம்

நாச்சொல்லு = விநோதம்

நாஞ்சல் = கலப்பை

நாட்டம் = வாள், கண், திருட்டி, ஆடல்

நாட்டுதல் = ஸ்தாபித்தல்

நாட்பூ = அப்போதைப்பூ

நாட = ஆஸ்ரயிக்க

நாடல் = தேடல்

நாடுகை = தேடுகை

நாடோடி = நாட்டிலேயுண்டாயிருக்கை

நாண் = சுவடி, அபிமானித்திருக்கை

நாணம் = லஜ்ஜா

நாணி = துர்க்கை

நாத்துகை = உபதேசம்

நாத்தூண் = நாத்தனார்

நாமங்கை = சரஸ்வதி

நாமம் = பெருமை, நாமமும்

நாயகப்பத்தி = நடுப்பத்தி

நாயகம் = நடு, நாயகக்கல்

நாயடியிட்டாப்போலே = மிருதுவாக

நாயன் = பர்த்தா, ஸ்வாமி

நாராயணகோவலர் = யாதவர்கள்

நாலத்தடம் = நாலாய்ச்சுற்றுடைத்தாயிருக்கை

நாலவம் = பேரெண்

நாலி = மடை, முத்து, விலங்கின் நடுவிற் சங்கிலி

நாவல் = நாவலென்றும் அறையென்றும் ஜெயித்தவன் சொல்லும் வார்த்தை

நாவலர்கள் = வாக்மிகள்

நாவி = கந்தம், கர்வம்

நாழ் = நறுவடமணித்தனம், பொய்

நாழல் = மகாதவி

நாள் = தூய்மை, நட்சத்திரம், ஆயுசு

நாளம் = மஞ்சள், நறுநாற்றம், ஒடுக்கம்

நாளி = நாய்

நாளியர் = பெண்பெயர்

நாற்றின = தொங்கவிட்ட

நான் = அபிமானம்

நான்மாடக்கூடம் = வித்வான்கள் திரளும் தேசம், மதுரை

நான்று = நாள்

நானகம் = குதிரை

நானம் = மணம், கவரி, நீர், பூச்சம், பிச்சி, கருமுகை, பரிமளம்

நானமர் = முத்து, நாவி

நிக்குதி = தோற்றாவு, சந்நிவேசம்

நிகர் = ஒப்பு

நிகழ்தல் = சஞ்சரிக்கை

நிச்சல் = நித்தியம்

நிசாசரர் = இராக்கதர்

நிசிதம் = கூர்மை

நிணம் = மாம்சம்

நித்தலம் = முத்து

நித்யமாக = நிரவம்யமாக

நிபந்தனம் = ஹேது, சம்பந்தம்

நியாயம் = சமம், பிரகாரம்

நிர்விடியகிரமம் = விஷயமில்லாதேயிருக்க விடியமென்று கிரகிக்கை

நிரந்தரவர் = சத்ருக்கள்

நிருமிரத்தல் = நிரூபித்தல்

நிரை = சமூகம், காலத்திரள்

நிலப்பண்பு = நிலஸ்வாபம்

நிலம் = பூமி, தனம்

நிலமை = ஸ்திதி, ஸ்வபாவம்

நிலவர் = நாதாக்கள்

நிலா = சஞ்சரிக்கை, கலை

நிலை = நிட்டை, துணிவு, ஸ்வபாவம்

நிலைக்குத்துகை = இந்த ஸ்தானத்தையறிகை

நிலைமிதி = நல்ல ஸ்வபாவம்

நிவா = வெள்ளாறு

நிழலுகை = நிறங்கொடுக்கை

நிறம் = பண், மேனி, வடிவு, ஸ்வரம், மர்மம், முறை, காந்தி, பிரகாசம்

நிறம் பெறுகை = அதிசயம் பெறுகை

நிறமைபூ = நிறமறிய

நிறவு = அடக்கம், பூர்த்தி

நிறை = பூர்த்தி, நிறைவு, மிகுதி, அடக்கம், சீர்மை

நின் = தகுதி

நினை = எழுங்கு

நினையார் = நினைக்கிறவர்கள்

நீச்சு நீர் = தரிக்கப்போகாமை

நீச்செழும்பு = பாசிபூக்கை

நீசர் = அறிவிலோர்

நீத்தல் = கடத்தல், விடுதல்

நீத்து = நீக்கிவிட்டு

நீதி = வழி, நடப்பு, ஒழுக்கம், ஆச்சாரம்

நீதிவானம் = பரமபதம்

நீர் = நீர்மை, ஸ்வபாவம், விஷம், ஜலம்

நீர்க்கண்டன் = நீலகண்டன்

நீர்க்களிப்பு = சைத்யம்

நீர்மை = கூவை

நீராடி = ருத்ரன்

நீராம்படி = உருகும்படி

நீருக்கப்பள்ள நாவியான் = நீர்வாயும் படியான பள்ளமடை

நீறன் = ருத்ரன்

நுகர்தல் = பருகல், உண்டலும்

நுடங்க = மயங்க, பயம், பூரிப்பு

நுண்மை = சூச்சுமதா, வைலக்ஷண்யம்

நுணியாடி = நாசீர்படன்

நுணுக்கம் = சூச்சுமம்

நுதல் = நெற்றி

நுதலி = கருதி, உண்டாக்கி, சங்கல்பத்து

நுதி = கூர்மை, நுனி

நுவலுதல் = சொல்லுதல்

நுளம்பு = ஒரு கொக்கு விசேஷம்

நுன்னுமிட்டார் = உங்களுக்கிட்ட மானவர்கள்

நுன்னும் = = உங்களுக்கு, இட்டர், இட்டமானவர்கள்

நுனியட்டம் = = சாபல்யம்

நூக்குகை = தள்ளுகை

நூல் = நூல், சாஸ்திரம், நூலென்று நூலாய் அத்தாலே சூச்சுமத்தைச் சொல்லித்து, அல்பமென்றபடி

நூற்று = மந்திரித்து

நூறுதல் = நயித்தல்

நெக்கு = நெகிழ்ந்து, சிதிலமாய்

நெஞ்சறவு = பிரணயகோபம்

நெஞ்சாறல் = துக்கம், விசாரம், மனக்கிலேசம் நெருங்கை

நீட்டாக = அதிதூரமாக

நெருமால் = சர்வாதிகன்

நெய்த்து = பளபளத்து

நெய்தல் = ஆம்பல், அல்லி, நெய்தலும்

நெய்மை = கூர்மை, மிகுதி

நெய்யாடல் = எண்ணை விளையாட்டு

நெய்யுண்ணி = நெய்யுண்ணும் சுபாவம்

நெருத்தம் = குண்டி

நெருநல் = நேற்று

நெளிகை = நிர்பந்தம், வணக்கம்

நெற்செய்யப்புற்றேயும் = நெல்லுப்பிணையடிக்கப் புல்லுத்தேயும்

நெற்பரிமாறுகை = நெல்லுத் தூற்றுகை

நெற்றி = எதிர்

நெற்றிக்கை = எல்லைக்கோல், முறத்தூறி

நெறி = ஒழுக்கம், மார்க்கம்

நென்மெலி = நெல்லிலே வைத்துத்தெறிப்பது, ஒரு படை வீட்டிற்குப் பெயர்

நென்னல் = நேற்று

நென்னேற்று = முதல் நாள்

நேசம் = கடைகயிறு

நேயம் = சினேகம், இனிமை

நேர் = ஒப்பு, வாய்ப்பு, நிறை, நேசம், மிகுதி சூச்சுமம்

நேர்ந்த = எதிரிட்ட

நேர் நிற்கை = நேராக நிற்கை

நேர் படுகை = சொல்லப்படுகை

நேர்மை = வைலக்ஷண்யம்

நேரான = யதார்த்தமான

நேரிய காதல் = சூச்சுமமான அன்பு

நேருகை = சூச்சுமம், கிட்டுகை, சம்ஹறிக்கை, தகுதி, தொழில்

நைகை = சிதிலமாகை

நையாயிகள் = சோடசப்பதார்த்தவாதிகள்

நைவளம் = கான விசேஷம், பண்

நைவிக்கை = தள்ளுகை

நொக்கென் = சீக்கிரமாக

நொடிதல் = சொல்லுதல்

நொய்ப்பம் = சூச்சுமம், சாமர்த்தியம்

நொய்ப்பு = நொய்மை, எளிசு

நொழந்த = கோக்க, செருக

நோக்குகை = ரக்ஷிக்கை, பார்க்கை

நோய் = வியாதி

நோய்ப்பம் = நோய்மை

நோவாது = சாதனானுட்டானம் பண்ணாதே

நோன்பியர் = ஆர்ஹதர்

நோன்பு = சாதனம்

நோன்மை = வலிமை

பக்குகை = சொல்லுகை, கூப்பிடுகை

பக்தம் = சோறு

பகட்டுகை = பிரமிப்பிக்கை

பகடு = புருஷயானை, பெருமை, மிடுக்கு

பகர் = ஒளி, காந்தி, கதிர், விளங்குதல்

பகர்க்கை = விளங்குகை, சஞ்சரிக்கை

பகருகை = சொல்லுகை

பகல்வன் = ஆதித்யன், சூரியன், பகலோன்

பகவர் = சன்னியாசி, குணநிட்டர்

பகழி = கூரியவாயம்பு, அம்படி

பகுவாய் = காளவாய்

பங்கி = மயிர்

பச்சைப்பசுந்தேவர் = கலப்பற்ற பரமதேவதை

பச்சைப்படாம் = பச்சைப்புடைவை

பசலை = வைவர்ண்யம்

பசிக்கிராகம் = கோபம், கிராகம்

பசுங்கூட்டு = நவீன சம்யோகம், அவயவசோபை, சந்தன, குங்கும், கற்பூரக் கூட்டு, பசுமையிலே கூட்டின கூட்டு

பசுந்துவல் = வைவர்ண்யம்

பசுமை = செவ்வி

பசை = கோது, பச்சை

பஞ்சசயனம் = அழகு, பரிமளம், குளிர்ச்சி, இவைகளையுடைய படுக்கை

பஞ்சவன் = பாண்டியன்

பஞ்சுக்கொட்டான் வாசல் = சந்திர புட்கரணிக்குக் கிழக்காக, ஆர்யபடர்கள் வாயில்

பட்டங்கட்ட = அபிஷேகம் பண்ண

பட்டம் = லலாடபூஷணம்

பட்டன் = பண்டிதன்

பட்டைப் பொதிசோறு = கமுகம்பட்டையிலே கட்டின சோறு

படப்பை = நீர்நிலம்

படலிகை = பூங்குடலை

படளம் = திரளம்

படாதல் = பரவுதல், பரம்புதலும்

படி = பூமி

படிகை = படிந்திருக்கை

படிமா = உவமானம்

படியாணி = உறையாணி

படுகாடு = கட்டிவிழுந்த காடு

படுகொலை = கோரபீடை, ஹிம்சை, குலையிலேப்பட்டுவிழும்படி

சொல்லுகை

படுதல் = தோன்றல், உண்டாகுதல்

படுபாடர் = கிருஹீதகிராஹிகள்

படை = கலப்படை, படைச்சால்

படைக்குறி = சேனாநிரூபணம்

பண் = சுவரம், காளபிசேஷம், கை, அழகு, சௌலப்யம்

வார்த்தை, கோடு, அணி

பண்டம் = பதார்த்தம், தனம்

பண்ணி = கும்பு

பண்ணை = இடைச்சேரி, திரள்

பண்பு = இயல்வு, பிரகாரம், சுபாவம், நீர்மை, மேனி, கர்வம், குணம், சீர்மை

பண்மை = குளிர்ச்சி, பெருமை

பணி = சர்ப்பம், கைங்கர்யம், கார்யம்

பணிக்கை = சொல்லுகை

பணிக்கொட்டில் = பண்ணுகிறகொட்டில்

பணிகை = சேவிக்கை

பணித்தல் செய்யாதவர்கள் = நியமிக்க மாட்டாதவர்கள்

பணிதல் = தாழ்தல், தொழுகை

பணியோந்திருக்கை = அதுவே ஆசையாயிருக்கை

பணிமொழி = காரியச் சொல்லு

பணியாக = அனுபவயோக்யமாக

பணிலம் = சங்கம்

பணிவகை = சொன்னபிரகாரம்

பணிவு = தாழ்வு

பணை = வாத்யவிசேஷம், கிளை, முரசு, நீர்நிலம், தெப்பம்

பணையம் = வட்டி

பத்தல் = குளிர்ச்சி, துளிர்த்தல்

பத்தை = பற்றாதவன்

பதஞ்செய்கை = பக்குவமாகை

பதண்பதண் = தவிக்கை

பதம் = சோறு, செவ்வி

பதரப்படாமை = தப்பாமை

பதவி = பதவி, அதிசயமும்

பதவிய = மிருதுவாய

பதி = ஊர், திருப்பதியும்

பதிகம் = பாதகம், கொடுமை

பதியம் = பத்யம்

பதினெட்டாம் பாஷை = அபூர்வமென்றபடி

பந்தம் = பிரதிக்ஞை, பந்து, பிரபந்தம்

பந்தர் = நுளையர், மீன்பள்ளியும்

பந்தனை = வருத்தம், பிள்ளைக்கு வருமணுக்கம்,

பந்தனையும்

பந்தார் = சத்ருக்கள்

பயமை = பெருமை, குளிர்ச்சி

பயலை = வைவர்ண்யம்

பயன் = பலம்

பயிர்ப்பு = வைவர்ண்யம், ஒரு விஷயத்தைப் பற்றினால் விடாதே சிநேகித்திருக்கை

பயிலுகை = அப்யசிக்கை, நெருங்குகை, வர்த்திக்கை

பயிற்றுகை = வர்த்திக்கை

பயிறுதல் = செறிதல்

பயின்று = கிட்டி

பர்வம் = அம்சம்

பரக்கழிக்கை = பழிவிளைக்கை

பரகு பாகு = பொறாமை

பரத்தல் = வைவர்ண்யம்

பரத்தை மாட்டு = அர்த்தார்ஜுனம்

பரமன் = தனக்கு மேலில்லாதவன்

பால் = பருக்கை

பரவல் = சொல்லல்

பரவுகை = சொல்லுகை, பரம்புதல்

பரவை = சமுத்திரம்

பராகர்த்தம் = வெளியிலிருக்கிற உபடபடாதிகள்

பரி = பக்ஷபாதம், செருக்கு செல்லுகை, போகையும், குதிரை

பரிகை = ஒருவனுக்குச் சகாயமாகை, ஸ்நேகமும்

பரிசல் = பிரத்யுபகாரம்

பரிசில் = பாரிதோஷிகம்

பரிசு = அழகு, பெருமை, ஒக்கம், பிரகார அதலம், வரிசை

பரிசை = மதிள்

பரிஞை = ஊர்ப்பெயர்

பரிதி = சூரியன்

பரிமா = குதிரை

பரிமாற்றம் = அனுபவம், விசேஷம், ஆசாரம், நெற்களம்

பரிய = தடித்த பரியட்ட

பண்பு = பரியட்ட உடை

பரிவு = மனப்பிடை, பரிவாய், வருத்தம்

பருகை = பானம் பண்ணுகை

பருங்குதல் = சொல்லுதல், நிரசிக்கை

பருப்பதம் = பர்வதம்

பருப்பு = மனோவ்யதை

பருவம் = வயசு

பல்கி = பருவாக, விஸ்தாரமும்

பல்லிபற்றுகை = பல்லியைப் போலப் பிடித்துக்கொள்ளுகை,

தனித்தனி வியாபிக்கை

பல்லிலேபட்டுத் தெறிக்கை = அவதார சாமீப்யத்தைப் பற்றுகை

பலதேவர் = பலதேவர்

பலநிலம் = தளத்தின் மேல் தளம்

பலம் = மாம்சம்

பலி = பூஜை, பிக்ஷை

பலிசு = பந்தித்து

பவ்வம் = சமுத்திரம்

பவம் = சம்சாரம்

பவன் = உத்பத்திக்காலம்

பவளம் = வாயு

பவனான = உத்பவிக்கிற

பவுண்புரன் = பௌண்டரீகன்

பவுழியன் = சேரன்

பழங்கிணறு = தூர்வாருகை, ஆவது இத்தனை பிரயாசை வேணுமோ என்றவாறு

பழம்புணர்ப்பு = பழைய ஸ்தோத்திரம்

பழனம் = நீர்நிலம்

பழி = பாவம், ஏணிப்பணி

பள்ளி = படுக்கை, பள்ளிக்கூடமும், பாளையகாரர்

பள்ளிக்கலகம் = பள்ளிக்கலகத்திலாண்டவனை விஞ்சமாப்போலே

பள்ளியந்துலாம் = தண்டிகை

பளிங்கு = தெளிவு

பற்கவ்வுகை = கோபத்தாலேயுதட்டைக் கவ்வுகை

பற்றாசு = ஹேது, அவலம்பம்

பற்றார் = பற்றாதார், சத்ருக்கள்

பற்று = துணை

பற்றுத்து = பற்றினது

பறை = வாத்யம்

பறைகை = சொல்லுகை, பறைந்து ஓடிப்போகை

பறைய = மாய, சொல்ல

பன்மை = பகுவசனம், பகுத்வம்

பன்னல் = நிரூபித்தல், சொல்

பன்னுதல் = ஆராய்தல், பரம்புதல்

பனி = குளிர்ச்சி, நடுக்கம், மழுங்கல், மழை, ஹிமம்

பனிப்படும் = வருத்தமுண்டாகும்

பனுவல் = நூல், சாஸ்திரம்

பனை = நீர்நிலம்

பனையம் = வட்டி

பா = பாபம், பதார்த்தம்

பாகன் = ரக்ஷகன், சாரதி, நிர்வாஹகன்

பாகு = பாகன், பாகன் செய்யுந் தொழில்

பாகுடம் = பச்சை உபஹாரம்

பாங்கல் = அட்டாலை

பாங்கி = தோழி

பாசடை = பச்சிலை

பாசம் = கயிறு, ஆசை, சங்கம், வலை, சிநேகம்

பாசனம் = பாத்ரம்

பாசுரம் = வாக்யம்

பாட்டம்பாட்டமாக = அடிக்கடி

பாடாற்ற = சகிக்க

பாடி = கிராமம்

பாடிகாப்பார் = தலைாரிகள்

பாடு = இடம், பக்கம், ஈடுபாடு, சமீபம், துக்கம், அஹோராத்ரம்

பாடு காவல் = அருகு காவல்

பாடோட = ஒரு வாக்காக

பாண் = பாட்டு, பாணன்

பாணல் = நெய்தலிலே அவாந்தரம்

பாணன் = பாடுவான், திருக்குலத்தடியான்

பாணனார் = ஆசார்யன்

பாணி = தாளம், தொனி, வாத்யம்

பாணிச்சி = பாடவல்லாள்

பாத்தம் = சத்ருசம்

பாத்துகை = நசிப்பிக்கை

பாதுகாவல் = அந்தப்புரம்

பாந்தள் = பாம்பு

பாமை = ஸ்வபாவம்

பாய்கை = பிரிந்துபோகை, குதிக்கை

பாய்த்தல் = காய்த்தல்

பாய்தல் = உதைக்கை

பாயர் = விஸ்தாரம்

பாயல் = படுக்கை

பார் = நத்தம், விடியம், பூமி, இடம்

பார்க்கவன் = குலாவன், குசவன்

பாறிக்கை = பரப்புகை

பால் = இடம், பாகம், சுபாவம், சமீபம், பகுதி

பாலைநிலம் = ஹேயபூமி, மருபூமி

பாவி = பரம்பி

பாவை = மரப்பாவை, ஸ்திரீ, நோன்பு

பாழி = படுக்கை, இடமுடைமை, மிடுக்கு

பாறு = கழுகு, பருந்து

பான்மை = சாரம், சுபாவம்

பானு = சூரியன், கிரணம்

பாஷண்டம் = பாபஷண்டம்

பாக்ஷிகம் = பலித்தல்

பிச்சின = முசுங்கின

பிச்சு = பைத்தியம், வியாமோகம்

பிசல் = தோள், கழுத்தும்

பிசல்கள் = எறும்பு, பிடரி

பிஞ்ஞகன் = பினாகி

பிடர் = தலை

பிடாம் = பச்சை வடம், கம்பளியும்

பிடார் = அகங்காரம்

பிடி = பொடி, அசோகம், பெட்டையானையும்

பிண்டம் = மூலப்பிரக்ருதி, காரணமும்

பிண்டி = அசோகம்

பிண்டியார் = பௌத்தர்

பிணக்கு = பிணங்குகை, விவாதம்

பிணி = வியாதி, துக்கம், கட்டும்

பிணிப்புண்கை = கட்டுண்கை, கட்டுப்படுகை

பிணை = மான்பேடை

பிணைந்த = கலந்த

பிதிர் = விலக்ஷணம்

பிதிருகை = காப்பிடுகை, ரக்ஷை

பியர்தருகை = பொய் சொல்லுகை

பியர்ந்தும் = பின்னையும்

பிரமாணித்தார் = விஸ்வசித்தார்

பிராயம் = வயது

பிரிகதிர்ப்படுகை = கதிர்ப்பிரிக்கை

பிரிநிலை = சாக்ஷி, ஒருவன் திருடினால் அவனுக்கும் புறத்திலேயாட் பார்த்துச் சகாயமாயிருக்கை

பிரியல் = ஊரிலே ரேகையிலே சிறிது

பிரித்துக்கொடுக்கை பிரிவு = பக்ஷவாதம், துக்கம்

பிலம்பன் = பிரலம்பாசுரன்

பிழக்கு = பிழை

பிழறுகை = விளங்குகை, மிகுதி, மிளிகுகையும்

பிழை = குற்றம், தப்பும்

பிழைக்கை = தப்புகை

பிள்ளை = கிருஷ்ணன்

பிள்ளைகள் = வழக்குச் சொல்

பிள்ளைத்தனம் = பால்யம்

பிற்குழை = பின்னே வருகை

பிற்றைப்போது = பிற்பாடு

பிறங்கல் = மாலை, மிகுதி

பிறங்குகை = விளங்குகை, நெருங்குகை

பிறட்சி = மதமதப்பு

பிறப்பிலி = தான்தோன்றி

பிறவிப்பாசம் = ஜன்ம வாசனை, ஜாதி தர்மம்

பிறழ = மிளிர, மிக, விளங்க

பிறை = சந்திரன்

பிறைதொழும் காலம் = சந்திரதரிசன காலம்

பின்னரும் = பின்னையும்

பின்னாட்ட = அனுவர்த்திக்க

பின்னுகை = சதிர்க்கை

பின்னே தள்ளுகை = நிர்ப்பந்தம்

பின்னேயென்று = பூஜ்யம்

பினாறுகை = திறக்கை, கழிக்கை

பீடு = பெருமை, அதிசயம்

பீர் = வைவர்ண்யம், அல்பம், பீர்க்கம் பூ

பீலிக்கண் = மயிற்றோகை

பீள்கன்று = கீழ்க்கன்று

பீளை = பீளைப் பூ

புகுவாய் = புகுகிற வாசலிலே

புக்கிலம் = இடம்

புகல் = சரீரம்

புகழ்க்கோல் = தராசுக்கோல்

புகாலிடம் = பாதகபதார்த்தத்தின்

கையிலகப்படாமலிருக்கிறவிடம்

புகை = புகுகை, போகை

புகையிலுண்பார் = சோம்பர்

புஞ்சி = பஞ்சு

புடை = பக்கம், பிரகாரம், இடம், சுற்று, பரப்பு, அபகாரம்

புண் = மாம்சம்

புணர்தல் = கூடல், சம்ஸ்லேஷம்

புணர்ப்பு = பிரேரிக்கை, சம்பந்தம் சுபாவம், சிருட்டி,

வெற்றிமாலை

புணர்வு = சேட்டிதம், சமுத்திரம்

புணை = தெப்பம்

புணைப்பள்ளி = மெத்தை

புத்தர் = ஆதித்யம், ஒப்பு

புத்தன் = புத்தன்

புத்து = பௌத்தர்

புத்தேளிர் = தேவதைகள்

புதஞ்செய்து = தாவி

புதல்வர் = புத்திரர்கள்

புதா = பெருநாரை

புதுக்கணிப்பு = நவீனகாந்தி

புதுக்கோமுற்றவர் = புதிய ராஜாக்கள்

புந்தி = மனது, வெளிநிலம்

புயக்காலம் = கார் காலம்

புயக்கு = வர்ஷா காலம், பசுமை, ஆகர்ஷம்

புயர்தல் = ஆகர்ஷம், போதல், இயற்றல்

புரத்தல் = காத்தல்

புரவி = குதிரை

புரவில் = பர்யந்தம், பூமரங்கள்

புராணர் = பழையவர்

புரி = வைலம்புரி, பின்னுகை

புரிகை = செய்யல், மீளுகை, அவிழ்க்கை

புரிசை = மதிள், பட்டணம்

புரிதல் = கொடுத்தல், வாங்கல், செய்தல், மீளுகை, மிகுதல்

புரிந்து = திரும்பி, ஆதரித்து

புரிநூல் = முப்புரிநூல்

புரிப்பிக்கை = திரும்பிப்பார்க்கை

புரிவுடைமை = ஆசை

புரை = ஒப்பு, சம்சயம், கிருகம், வழி, ரந்திரம், மித்யை

புரையா = ரந்திரமன்றிக்கே

புரைவாய் = இடம்

புல்குகை = ஊடுகை

புல்குவணை = தழுவுமணை

புல்லல் = புனைதல்

புல்லிமை = பொல்லாங்கு

புல்லிலை = மிருதுவான இலை

புலம்பு = புலப்படுகை, தனிமை, நடுக்கம்

புலமை = கானம்

புலரி = பூமி, லீலை, ஆனைத்தொழில்

புலருகை = உலருகை

புலவி = ஸ்திரீ, துக்கம்

புலன் = விஷயம், அழகு, இந்திரியம்

புலால் = ரக்தம், மத்ஸ்யம்

புலாவுகை = சப்திக்கை, பிரகாசிக்கை, வடிவு

புழை = சுழி, துணை, சாக்ஷி

புள்ளினம் = உபயவிபூதி

புளி = புழுகு

புற்கவ்வல் = விடாதேசவங்கல்

புறம் = முதுகு, பூங்கொத்து, மாலை, காணாதவிடம்

புறவில் = பர்யந்தம், ஊரைச் சூழ்ந்த சுடுகாடு, பூமரங்கள்

புறை = பொறாமை, பாரம்

புன்கண்மை = பேகணிப்பு, கண்கலக்கம்

புன்மை = துக்கம், பொல்லாங்கு

புன்னாவம் = பொய், கிருத்ருமம்

புனம் = நிலம்

புனைகை = சூடுகை, கட்டுகை, புனையப்படுகை, சாற்றப்படுகை

புனைதல் = தொகுத்தல், பந்தித்தல்

பூ = பொழுத, காலம், பூமி

பூச்சி = பூவிலேயுண்டானவன்

பூசல் = கூப்பீடு, யுத்தம், சம்பந்தம்

பூண் = ஆபரணம்

பூணி = பசு

பூணிக்கை = பிரதிக்ஞை பண்ணுகை

பூத்தரு புணர்ச்சி = பூத்தரு புணர்ச்சி என்றும், புனல்தரு புணர்ச்சி என்றும், களிறுதரு புணர்ச்சி என்றும் புணர்ச்சி மூன்று விஷயமா யிருக்கும், பூத்தரு புணர்ச்சியாவது, அருங்கொம்பிலே பூவிருந்தால், அதைக் கண்டு எனக்குப் பறித்துத்தர வேணு மென்ன, நாயகன் தன்னைப் பேணாமல் பறித்துக்கொடுத்தால் அதுக்காக ஆலிங்கனம் பண்ணுகை, புனல்தரு புணர்ச்சியாவது, நீரிலேயழுந்துகையிலே நாயகனுதவியெடுத்தால் அதுக்குத் தோற்று, ஆபத்திலே ரக்ஷிப்பதேயென்றாலிங்கனம் பண்ணிக்கொள்ளுகை, களிறுதரு புணர்ச்சியாவது, மதயானை துரத்திக் கொண்டுவர அதன் கையிலேயகப்படாதபடி தப்பிவித்தாவதற்குத் தோற்றாலிங்கனம் பண்ணிக்கொள்ளுகை

பூதி = புழுதி

பூநெய் = தேன்

பூம் = அழகு, பொலிவு, பூவை

பூமகள் = பெரிய பிராட்டியார்

பூமகன் = பிரம்மா

பூரி = பொல்லாங்கு

பூரிக்கை = ஆஸ்ரயிக்கை

பூரியர் = பொல்லாங்கர்

பூவைக்கிட்டோம் = காமுகர், ஸ்திரீகளுக்கிட்டதை பூவைக்கிட்டோமென் சங்கேதச் சொல்

பூனை = பூண்டு விசேஷம்

பெண்கள்படும் = நீர்வாய்ப்பு

பெண்ணை = பனைமரம்

பெய்கை = இடுகை, சொடுக்கை, உண்டாக்குகை, அலங்கரிக்கை

பெய்துறவு = அஞ்சுகை

பெரியமுதலியார் = நாதமுனிகள்

பெருங்கடல் மண்டினாரைப்போலே = சமுத்ரங்

கோத்தாப்போலே

பெருந்தூறாய் = சம்சாரமாய்

பெருநிலை = பக்ஷபாதம்

பெருநீள் = பெருவளர்த்தி

பெரும்பாழ் = மூலப்பிரக்ருதி

பெருமக்கள் = பெரியோர், சுவாமி

பெற்பிறவி = விக்ரகம்

பெற்றம் = பசு, கன்று, பெருமை

பேகத்து = துக்கம்

பேணத்தகும் = ஆசைப்படத்தகும்

பேணல் = ஆசைப்படுதல், ஆதரித்தல்

பேதமை = அஞ்ஞானம்

பேது = ஒளிவரவு, பேதைத்தனம்

பேதுற்று = ஆசைப்பட்டு, கிலேசித்து, நெஞ்சழிவு, அஞ்சுகை, கலங்குகை

பேதறுகை = ஆசைப்படுகை, வைவர்ண்ட

பேதை = அறிவிலி, பருவம், குழந்தை, அறிவுக்கேடு

பேதைத்தனம் = அறிவின்மை, பருவம்

பேராளன் = பெரியோன்

பேருகை = உலாவுகை, வளருகை

பை = அழகு

பைங்கூழ் = பயிர்

பைசல் = பிள்ளை

பைதல் = பாகம், பையல்

பைம் = பசுமை, குளிர்ச்சி, அழகு, விஸ்தாரம்

பைமை = அழகு, குளிர்ச்சி

பைய = மெல்ல, பொய்க்க

பொங்கத்தம் = பொங்கு, சப்தானுகாரம்

பொங்குகை = மிகுதி

பொட்ட = பொட்டென

பொட்டு = வயிறு, பதரும்

பொடிகை = வைகை

பொடுக்கென = சட்டென

பொத்தல் = துளைத்தல்

பொதி = கட்டு

பொதுக்க = சடக்கென

பொதுநாயகம் = சர்வநிர்வாகம்

பொதும்பு = துளை, சாரம், குழி

பொதுளி = சமூகம், செறிவும்

பொந்து = வளை

பொய் = பிரக்ருதி

பொய்க்க = மெள்ள

பொய்மை = பொய்

பொருகை = செறிகை, யுத்தம் பண்ணுகை

பொருத்தம் = சாகம்

பொருத்தல் = தகிக்கல்

பொருதுதல் = நீங்குதல்

பொருந்துதல் = இசைதல், சேருதலும்

பொருநல் = திருத்தாம்ரபரணி

பொருப்பு = மலை, அழகும்

பொருவு = ஒப்பு, தடை, யுத்தம், செறிவு

பொருள் = உபாயம், அர்த்தம், சப்தம்

பொருள் வையதிகாரம் = அர்த்தார்ஜுன் பிரகாரம்

பொல்லல் = துளைத்தல்

பொலன் = பொன்

பொலிகை = மிகுதி, சம்ருத்தி

பொலிவு = அழகர்

பொழிதல் = சொரிதல், வர்ஷிக்கை

பொழுது = சூரியன், காலம்

பொள்ளை = துளை

பொற்பு = அழகு, சமீபம், பலம்

பொற்றை = கற்பாறை, காடு, மலை

பொறாவாணை = வியர்த்தமானவாணை

பொறி = விதி, பொறியும், ஒப்பு, லாஞ்சனம், புள்ளி, அழகு, பெருச்சாளிப்பொறி

பொறிகை = எண்ணேற்கை

பொறை = பொறுமை, கிருபை

பொன் = அழகு, வைவர்ண்யம்

பொன்ற = நசிக்க

பொன்றி = சரீரம்

பொன்றிப்போகை = கள்ளராகப்போகுகை

பொன்றுவிக்கை = முடிக்கை

போக்கடி = பரிகாரம், உபாயம்

போக்கன் = உள்ளிலாதவன், வியர்த்தன்

போக்கி = ஒழிய

போக்குவிட்டு = போகவிட்டு

போக்குதல் = போகுதல்

போகப்பற்றி = போய்

போடக்கை = பண்ணறை, ஒரு காரியத்திற்கும் ஆகாதவன்

போத்துகை = வாங்குகை

போதகம் = யானை, குட்டி

போதர = மிகவும்

போதி = அரசமரம், அமணர்

போது = அலகுகை, மொட்டிக்கை, புட்பம், வேளை, சஞ்சரிக்கை, அலக்கை

போது செய்கை = மொட்டிக்கை, அலகுகை, காலம்

போந்து = பனை

போய்ப்பாடு = இடமுடைமை, வலி, புகழுடைமை

போர் = யுத்தம், ஆயுதம், நெல்லுப்போர்

போர்த்தல் = மூடுதல்

போர = அதிகமாக, உண்டாக

போருகை = போகை, வருகையும்

போருமாய்த்து = பூர்ணமாய்த்து

போலி = பிரகாரம்

போழ்க்கை = இரு துண்டமாக்குகை

போனகம் = திருப்போனகம்

பௌழியன் = ரிக்வேதி

மக்கள் = மனிதர்

மக்காணி = ஸ்தூல சரீரம்

மகன்றில் = அன்றில் பேதம்

மாகாவிருச்சம் = இலவமரம், கள்ளியும்

மங்குதல் = அருளுதல், துவளுதலும்

மங்குல் = மேகம், ஆகாசம்

மச்சம் = அடையாளம்

மச்சு = மேற்றளம்

மசக்குப்பரல் = மசக்கின் விதை, துலுங்கா விதை

மகனாட்டலை = லஜ்ஜை

மஞ்சாட்டம் = விளையாட்டம்

மஞ்சாடி = கழஞ்சு, நிறுக்கும் எடைக்குப்பெயர்

மஞ்சியாக = சமூகமாக

மஞ்சு = அழகு, ஆபரணம், இளமை, மேகம், முகடு, யானை முதுகு

மஞ்ஞை = மயில்

மட்டிக்கை = மந்திக்கை

மட்டு = தேன்

மட = மடப்பம்

மடங்கல் = சிம்மம்

மடந்தை = யுவதி

மடப்பம் = சாபலம், பவ்யதை, அழகு, லஜ்ஜை, பற்றியது விடாமை

மடல் = தளம், பனையோலை

மடி = சோம்பல், புடைவை

மடுத்த = பிரவ்ருத்தமான

மடுத்துப்பிடிக்கை = கைமடக்குப்பிடிக்கை

மண்டுகை = விரும்புகை, தள்ளுதல்

மண்மகள் = பூமிப்பிராட்டி

மணக்குகை = உசப்பிக்கை

மணத்தல் = கலத்தல்

மணம் = செவ்வி, கல்யாணம், பரிமளம், இயற்கை, கைகோக்கை, விவாகம், விலக்கு

மணாட்டி = பெண்டாட்டி

மணி = அழகு, நிறம், விலக்ஷணம், பாறை, நீலமணி

மணிமாமை = அவயவ சோபை

மணியறை = மாணிக்கப்பாறை

மணியிலணி = மணியிலணி நிறமாய என்கிறவிடத்தில், மணியிலென்கிறது ஐந்தாம் வேற்றுமை, மணியில், மணியைக் காட்டிலும் என்று பஞ்சமீ வியக்தி, வேற்றுமை, விபக்தி

மத்தளம் = முழக்குவாத்யம்

மதப்பம் = பள்ளத்து வருகை

மதம் = கர்வம், களிப்பு

மதமத்தப்பூ = ஊமத்தம்பூ

மதலை = பிள்ளை, அழகு, இளமை, பிள்ளைத்தூண்

மதலைத்த = திரண்ட

மதவைத்தலை = பிள்ளைத் தூண்தலை

மதவு = பிள்ளை

மதி = சந்திரன், சந்திரசேகரன், அனுமதி, சத்ருசமாகை,

ஞானம்

மதிசூடி = ருத்ரன்

மதிப்பன் = மதியை உடையவன்

மதிப்பு = மேன்மை, ஆதிக்யம்

மதியம் = சந்திரன்

மதுகரம் = வண்டு

மந்தாரம் = கற்பகப்பூ

மந்தி = பெண் குரங்கு

மந்திரம் = சர்வேஸ்வரன், ஏகாந்தம்

மந்திரித்து = ஆலோசனை பண்ணி

மயக்கம் = கலவி, கூடல்

மயக்கு = தெரியாச் செயல்

மயங்கல் = கூடல், கலவி

மயங்கி = மோகித்து, அறிவிழந்து

மயிரெறிகை = மயிர்க்கூச்சு

மயல் = இருள், பிச்சு, விஸ்மிருதி, பிராந்

மயவின்மை = மதிமயங்குப்பண்ணுகை

மருங்கு = சமீபம்

மருத்துவன் = வைத்தியன், ஆச்சாரியன்

மருத நிலம் = நதி தீரம்

மருப்பு = கொம்பு

மருபாடுருவ = பின்னே புறப்பட

மல்குதல் = மிகுதி

மல்லல் = ஆரவாரம், பெருமை, மிடுக்கு

மல்லு = மிடுக்கு, மல்லர்

மல்லை = மிடுக்கு, விஸ்தாரம்

மலக்கம் = கலக்கம்

மலிதல் = மிகுதி, கிளப்பம்

மலைக்கை = மலங்குகை

மலைமகள் = பார்வதி

மலையமான்கள் = தேச விசேஷத்தில் தலையாரிகள்

மலையாளர் வளைப்பு = மலையாளிகள் ஒருவன் கையிலே யொன்று வாங்க நினைத்தால், வாங்கியல்லாது போகார்கள்

மழலை = இளமை, பால்யம்

மழலைச்சொல் = பாலர் சொல்லும் வார்த்தை

மழறுகை = கலக்கம், அபிபவம்

மழு = பரசு

மழுவாளி = ருத்ரன்

மழை = ஆகாசம், மேகம், குளிர்ச்சி

மள்ளர் = வலையர், உழவர்

மறப்பு = விஸ்மிருதி

மறம் = கோபம், கொலை, கொடுமை, தறுகண்மை,

அருளின்மை

மறி = குட்டி, இளமை, அலை

மறுக்குகை = மனந்திரிவைப்பண்ணுகை

மறுக்குதல் = கலக்குதல்

மறுகல் = கலக்கம், அஞ்ஞானம்

மறுநனைய = மறுபாடுருவ நனைய

மறுமுட்டுப்பொறாதபடி = பின்னையொரு கார்யத்திற்காகாதபடி

மறுமை = அதிட்டம், மேலும்

மன் = ராஜா, சுவாமி

மன்றல் = விவாகம்

மன்றில் = பொது நிலம்

மன்று = நாற்சந்தி, பொதுச்சாவடி அம்பலம்

மனந்திரிவு = சம்சயம்

மனிச்சு = மானுஷயம்

மனைகை = உண்டாக்குகை

மா = மணம், பூஜ்யதை, பெருமை, அரி, சீதேவி, செல்வம்,

ஆடை, கருமை, வண்டு, நீட்சி, கறுப்பு, ஆனை, குதிரை,

சிம்மம், மான், அழகு, நாலுகால் ஐந்துக்களுக்கெல்லாம் பெயர்

மாக்கோல் = குதிரைக்கசை, தாற்றுக்கோலும்

மாகம் = பரமாகம்

மாசு = குற்றம்

மாட்சி = ஒளி, அழகும்

மாட்டுகை = எரியிடுகை, போக்குகை

மாட்டெறிந்தான் = நிச்சயித்தான்

மாடம் = கிருகம்

மாடாந்துகை = மழந்துகை

மாடு = தனம், சமீபம், பசு

மாண் = பெரியவளவு, பரபாகம், நன்மை, பிரம்மச்சாரி, அழகு

மாண்பு = ஸ்திரீத்வம், மிடுக்கு

மாணிக்கம் = பத்மராகம்

மாத்சரியம் = பிறர் மினுக்குப்பொறாமையை

அனுட்டானபர்யந்த

மாக்குகை மாத்து = கொண்டாடப்படுகை, உடைத்தாகை

மாதவி = குருக்கத்தி

மாதிமை = மேன்மை

மாதிரம் = திக்கு

மாது = ஸ்திரீத்வம், அழகு, சிநேகம், பெண், மிடுக்கு

மாந்தர் = மனிதர்

மாந்துகை = புஜிக்கை, மயங்குகை

மாம்பழவுண்ணி = மாம்பழத்தோடு சம்பந்தமில்லாததொரு

பூச்சி

மாமை = அழகு, தேககாந்தி, அவயவ சோடை

மாயகை = முடிகை, நசிக்கை, துக்கப்படுகை

மாயம் = அச்சரியம், இச்சை

மாயவன் = ஆச்சர்யகுப் சேட்டிதமுடையவன்

மாயன் = கரியன்

மார்மட்டு = அளவுபட்டு

மாரி = மேகம், வர்ஷாகாலம்

மால் = பிராந்தி, வியாமோகம், கறுப்பு, உயர்ச்சி, வேறொன்றை நினையாதிருக்கை, கலக்கம்

மாறுதல் = மயங்குதல்

மாறுகை = பிச்சேறுகை

மாலை = ராத்ரி, சந்தியாகாலம்

மாழை = சௌக்யம்

மாற்றம் = சொல், பிரத்யுத்தாம்

மாற்றோலைப்பட்டவர் = ஓலை மாறாடப்பெற்றவர்

மாறு = ஒப்பு

மாறுகை = பொருகை, சங்கிரமிக்கையும்

மான் மக்கள் = நத்தமக்கள்

மானம் = அளவு, பெருமை

மானாவிச்சோலை = மகாநவமிக்கு ராஜா கொலுவிருக்கிற வெளிகளிலே கமுகு, பலா, வாழை முதலான மரங்களை வெட்டிக் கொண்டுவந்து சோலை செய்வார்கள், அத்தைச் சொல்லுகிறது, சொக்கப்பனை

மானாவீ = மகாநவமி, அலங்காரம்

மிகுதி = தோற்றம், அழகு

மிகை = அதிகம், பாரமும்,

மிடி = தாரித்ரியம்

மிடை = கிலேசம், கோபம்

மிடைகை = நெருங்குகை

மிடைந்த = நெருங்கின

மிண்டர் = மூர்க்கர்

மிதி = பூமி

மிலைக்கை = சங்கிரமித்துச் சப்திக்கை

மிழறுகை = அலமருகை, நிரம்பாமென்சொல்

மிளிர = ஒளிவிட

மிளிருகை = விகசிக்கை

மிளிறுகை = இடம் வலங் கொள்ளுகை

மிளை = சிறுதாறு

மிறுக்கு = துக்கம், வருத்தம்

மின்மினிபறக்கை = அனுபவத்தைக் கிரகிக்கப்போகாத படியிருக்கை

மினுங்குகை = பிரகாசிக்கை

மீ = மேல், ஆச்சரியத்திலேயும்

மீசு = உச்சிட்டம்

மீசுண்ணி = உச்சிட்ட போகிகள்

மீண்டு = திரியிட்டு

மீதுர்ந்து = மேல்வந்து

மீமிசை = மிக்கது

மீமீது = மேலாகி, மேன்மையைச்சொல்கிறது

மீளை = தலையோடே

மீன் = நட்சத்திரம், மத்சயம்

முக்கியம் = வேண்டப்பாடு, அதிசயம்

முக்குகை = முழுக்குகை

முக்குணுக்கு = மூன்று வளைதலாயிருக்குகை

முக்குவர் = முழுகும் பேர்

முக்கோட்டை = முந்தக்கவி பாடுவிக்குமாலயம், அதாவது, கவியலாதாரையும், கவி சொல்லவல்லராம்படி பண்ணிவைக்கும் கஜானன் இருக்குமிடம்

முகக்குகை = அனுபவிக்கை

முகடு = உச்சி, சிவரம்

முகந்து கொள்ளுகை = மண்டியனுபவிக்கை

முகப்பிலே = முன்னே

முகப்பு = முன்

முகபேதம் = ஆகாரவேதம்

முகில் = மேகம்

முகிழ்நகை = சுத்தியோகம், மந்தஸ்மிதம்

முகந்தன் = மோக்ஷப்ரதன்

முசுமுசுப்பு = சிரத்தை, இன்மை

முட்டாக்கிட்டுக்கிடக்க = ஏகாந்தம், ஸ்வாத்யானுபவம்

முட்டாணி = விலங்கிற்குத்தைக்கிற ஆணி

முட்டு = பொறுத்திருக்கை

முட்டுக்கோல் = கன்னக்கோல், குதிரை நடத்துகிறதாற்றுக்கோல்

முடி = மயிர்முடி, களை

முடியாமை = கிடையாமை

முடை = துர்க்கந்தம்

முன்டகம் = தாமரை

முண்டர் = சைவர்

முத்தக்காசு = கோரைக்கிழங்கு

முத்தம் = அதரம்

முத்தல் = மிடுக்கு

முத்து = ஆனந்தம், பிரீதி, அழகு

முத்துவமை = பூரணத்ருட்டாந்தம்

முதம் = சேட்டம்

முதல் = கைமுதல்

முதல் முன்னம் = பழையதாக

முதலி = பிரயாணன்

முதலியார் = அதிபதி, சிரேட்டன்

முதற்கொள்ள = அளவிட

முதறுகள் = பூதம்

முதன்மை = காரணத்வம்

முதுகிட்டான் = அம்பராத்தூணி

முதுமை = பெருமை, பழைமை, உயர்ச்சி

முந்தறமுன்னம் = பிரப்பிரதமம்

முந்தானை = மிடி, தலைப்பு

முந்திரிகைப்பழம் = திராக்ஷைப்பழம்

முயங்க = கட்டிக்கொள்ள, நெருங்க

முயல் = அகங்காரமாகிற முயல், உத்சாகம், பத்தனம்

முயலுகை = உத்சாகிக்கை

முரசு = வாத்ய விசேஷம்:

முரண் = மிடுக்கு, வக்கிரம்

முரி = பெருமை

முரிகை = வாய் மடிக்கை, முறிகையும்

முருக்கி = கொன்று

முருக்குகை = தேஜோபங்கம் பண்ணுகை

முருகு = தேன்

முருகை = கிளறுகை

முருட்டுடல் = திருடமானவுடல்

முருடுகொளுத்துகை = முருட்டுக்கட்டையிலே பற்றுகை

முல்லை = யாழ், குழல், முல்லையும்

முழஞ்சு = துளை

முழத்த = நிரம்பின

முழலை = வேங்கைப்புலி

முழவு = மத்தளம், வாத்தியம்

முழுகி = அவகாஹித்து

முழுசுகை = அவகாஹிக்கை, முகத்தாலே செய்யும் வியாபாரம்

முழை = துவாரம்

முளரி = சிறுசுள்ளி, தாமரை, முள்ளு

முளி = கொழுந்து, தளிர், உலர்ந்தது

முற்கோலி = மேலெண்ணி

முற்றம் = முடிதல், முற்றுமாய், வெளி

முற்றூட்டு = ஏகபோகம், எல்லாம்

முறி = = தளிர், கண்டம்

முறிக்குக்கிழக்கு = கரைக்குக்கிழக்கு

முறியாழி = முரிந்த மோதிரம், வளை

முறுகல் = ஹேயம்

முறுடன் = l = பற்றி விடாதவன்

முறை = பாயாயம், பிராப்தி, கர்ப்பவாசம், நரகம்

முறைமுறை = பர்யாயம் பர்யாயமாக

முறைமை = சம்பந்தம்

முன்றோன்றல் = தமையன்

முன்னிலை = மத்யம் புருஷன்

முன்னிவந்து = முன்னே வந்து

முன்னோட்டுக் கொள்ளுகை = வருகிற காரியத்திற்கு முன்னேயா லோசிக்கை

முனவே = முன்னே

முனி = துறந்தவன்

முனிவர் = குணநிட்டர்

முனிவு = வெறுப்பு, பொடிகை

முனைத்த = மிக்க

முனையே = முன்னே

முனைவன் = பிரயாணன்

மூக்குறிஞ்சுகை = முழுசுகை

முக்கை = நசிக்கை மூசுகை மொய்க்கை, விடாதேயிருக்கை

மூத்தபிள்ளை = செல்வப்பிள்ளை

மூது = பழைமை, காலங்கண்டவர்கள், அறிந்தவர்கள்

மூர்த்தி = சுவாமி, விக்கிரகம்

மூரி = பெருமை, வலி, இடம்

மூரிநிமிருகை = சோம்பல் முறிக்கை

மூரிநீர் = சஞ்சரிக்கிற நீர், சமுத்திரம்

மூரிமடிகை = முறிகை

மூவாமை = நசியாமை

மூழ்த்த = நிரம்பின்

மூளை = அஸ்தி

மூன்று தமிழ் = இயலிசைநாடகம்

மெச்சு = மதிப்பு, சந்தோஷம்

மெய் = உடம்பு, சத்யம், சுபாவம், ஆத்மா

மெய்க்காட்டு = எண்ணிக்கை, கொடுக்கை

மெய்ப்பொருள் = ஆத்மா

மெய்ம்மை = மெய், முழுச்சொல்

மெய்யாகிறது = பகவத் விஷயம்

மெய்யாந்து = மயங்கி

மெலிகை = இளைக்கை, நைவும்

மெலிவு = நைவு, உடம்பிளைக்கை

மேகர் = ஜாகு, முன்னே நீநர் விடுகிறவர்கள்

மேகலை = வஸ்திரம், அரைநாண்மாலை

மேகுகை = பிரகாசிக்கை

மேத்து = சிரத்தை

மேதி = எருமை, நாடு

மேநாள் = பூர்வ நாள்

மேய் = பொருந்தி, கிட்டி, ஆதரத்தைப்பண்ணி

மேய்கை = செய்கை, மேவுகை, பொருந்துகை

மேல் = பண்டு, மேலையார், பூர்வீகர்கள், சிரேட்டாள், முன்னே

மேல்தோன்றி = விருக்ஷ விசேஷம், செங்காந்தள், ஆவாரை

மேலாப்பு = மேல்கட்டி

மேலிட்டு = மேல்விழுந்து

மேவுகை = பிராபித்தம்

மேற்பால் = மேலைத்திக்கு

மேன்மேலும் = உபர்யுபரி

மேன்மை = பெருமை

மேனாணிப்பு = கர்வம் ஆதது

மை = இருள், கறுப்பு, மையும்

மைத்த = கறுத்த

மைந்தன் = மிடுக்கன், புத்திரன் ராஜா, யௌவனம், வலி

மையல் = வியா மோகம், மயங்குகை, அறிவுக்கேடு

மொக்கல் = குமிழி

மொகடு = முதுகெலும்பு

மொய் = அழகு, செறிவு, பெருமை, வலி, மிகுதி

மொய்த்தல் = தள்ளுதல்

மொய்ம்பில் = மிடுக்கு

மோசுமோசுப்பு = சௌகுமர்யம்

மோடி = காடு, பிடாரி

மோடு = தோள், பெருமை

மோத = அடிக்க

மோபழம் = மேகற்பழம்

மோய் = மாதா

மோருகிற = ஆஸ்ராணிக்கிற

மோழை = கீழாறுநரகம்

மோறாந்து = தூறு மண்டின, திறந்த

மோஷகர் = திருடர்

யாழ் = கானம், தாமரை

யோனி = ஜாதி, உற்பத்தி

வக்குரிக்க = வெடிக்க, வேகுகை

வக்கென்றிருக்கை = வேட்டையாயிருக்கை

வகர்த்தது = அப்பிராப்தமானது, பிராப்தமானதும்

வகுக்கை = பிரிக்கை

வகுத்தது = கிடையாததும், கிடைத்ததும், வகுத்த ஞன்றுமாம்

வகுப்பு = கட்டளை

வகை = பிரகாரம், சுபாவம்

வங்கணம் = வம்சம், சிநேகம், சிநேகிதன்

வங்கம் = மரக்கலம், கப்பல்

வசிகை = வசீகரிக்கை

வசிசெய் = வசீகரிக்கை

வசுக்கள் = தேவதைகள்

வசை = தோஷம், முழுது, குற்றம்

வஞ்சம் = வஞ்சனை, பொய்

வஞ்சிக்கை = ஒன்றைச் சொல்லி ஒன்றைச் செய்கை

வடகு = லஜ்ஜை, கலாபதேகத்தில் பக்தி

வடகுன்று = மகாமேரு

வடதிரிசொல் = ஆரியச்சிதைவு

வடம் = ஆலமரம், தழைத்தல், தொடை

வடமொழி = சம்ஸ்கிருதம்

வடி = கூர்மை, அழகு

வடிம்பிட்டு = காலாலே குத்தி, குத்தி

வடிவு = சுபாவும், அழகு, வற்றுதல்

வடு = அவத்யம்

வடுகர்விடு நகம் = வடுகர் கையில் கூர்கிட்டிக்கோல்

வண்டலிடுகை = வண்டல்படிகை

வண்டானம் = நீர்க்கோழி

வண்டு = நாயகன்

வண்ணக்கா = அழகியதாக, சிரேட்டமாக

வண்ண ம் = சுபாலம், நிறம், தொனி, அழகு, பிரகாரம், பிரகாசம்

வண்மை = சுபாவம், அழகு, சம்பத்து, உதாரம், குளிர்ச்சி

வது = மது, மணம், கல்யாணம்

வதுவை = கல்யாணம், பரிமளம்

வந்தி = வளை

வந்திக்கை = ஸ்தோத்திரம் பண்ணுகை, கோபிக்கை

வப்புத்தட்டுகை = கர்வத்தினாலே தொடைதட்டுகை, தோளிலே தட்டுகையென்றுமாம்

வம்பு = அபூர்வம்

வயிறுதாரி = பகுபுக்தி

வயிறுவாய்க்கை = கர்ப்பமாகை

வர்ணசிரமஹ = அக்ஷர சிக்ஷை

வரம் = பலம்

வரம்பு = அணை, தடை, அவதி

வரலாறு = ஹேது

வரி = ரேகை, தர்சனியம், அழகு, கீற்று

வரிசை = ஆதிக்யம்

வரிந்து = சுட்டி

வதிநிழல் = நிழல், வெய்யில்

வருட = தொடை குத்த

வருத்தம் = யத்தனம், துக்கம், மனக்கிலேசம்

வரைந்துகொண்டு = வரித்துக்கொண்டு

வரையிட்டுக்காட்டுகை = ஆறு பெருகுகிற போது மேன் மேலும் அடையாளயிட்டுக் காட்டுகை

வலம் = துணிவு, பலம்

வலிக்கை = இழுக்கை

வலிய = திருடம்

வலை = தேகம்

வவ்வுகை = உண்கை, வாங்குகை, கவ்வுகை, சுவீகரிக்கை

வழி = வாசல், நடு, ஒழுங்கு, பிராப்யம், மார்க்கம்

வழிப்பட்ட = வழிவிட

வழிப்படுகை = ஆஸ்ரயிக்கை

வழியட்டுகை = வழியலிடுகை

வழியடிப்பார் = வழிபறிக்கிறபேர்

வள்ளி = வல்லி

வள்ளுகிர் = கூர்மையுடைய நகம், பெளைவையுடையதும்

வளவன் = சோழன்

வளாய் = அளவளாவி, சுற்றி

வளை = கைவளை, பாழி

வளைதல் = போக்கறுதல், போக்கறுதி

வளைப்படுகை = ஆணையிட்டுத்தகைந்துகொள்ளுகை

வளைப்பு = மறிப்பு

வளைப்புக் கிடக்க = மறிக்க

வறமுறுகல் = வறுக்கச்செய்தே கருகிப்போகை

வறுநாற்றம் = வறுத்த திரவ்ய நாற்றம்

வன்சேறு = வட்டிச் சேறு

வன்மை = மிடுக்கு, அழகு, ஔதார்யம்

வன்னம் = பிராமணாதி வர்ணம், நிறம், சுபாவம்

வன்னியப் பற்று = பாளையப்பட்டு, பாளையகாரர்

வன்னியம் = குறும்பு, பிரதிஹதி

வனப்பு = நானாவர்ணம்

வனம் = அழகு, உபகாரம், சம்பத்து, கட்டளைப்பாடு, சஞ்சரிக்கை

வனைதல் = செய்தல்

வாங்குதல் = வளைதல், வலித்தல்

வாசம் = வாசனை, குளிர்ச்சியும்

வாசி = அதிசயம், குதிரை, வாஜி

வாட்டம் = சங்கோசம்

வாட்தீயீடாக = தீக்ஷணமாக

வாட = நசிக்க

வாணன் = பாணாசுரன், மகாபலி, நிர்வாஹகன்

வாணாள் = ஆயுசு, வாழ்கிற காலமும்

வாணிபம் = வியாபாரம்

வாநிறம் = வெளுத்த நிறம்

வாய் = வாய்ப்பு, ஸ்வரம், இடம்

வாய்க்கை = கிட்டுகை

வாய்கரை = மேலெழ, கதியின்மை

வாய்த்தலை = மூலம்

வாய்புகு சோறு = வாயிற்சோறு

வாய்புகு நீர் = ஜீவனம்

வாய்மை = மெய், வாக்மிதை

வாய்வாய் = சுபோலதாடனம்

வாய்விடாச்சாதி = வார்த்தைசொல்ல அறியாதவன்

வாயாடி = சங்கல்பித்து

வாயுறை = அருகம்புல்

வாயோலை = நெல்லுக்குழிக்குப் போடுகிற சீட்டு

வார் = சூழ்ச்சி, வாராநிற்கை, ஜலம், பூர்ணம், நீட்சி, முலைக்கச்சு, நெடுமை

வார்தல் = எழுகுதல், போதல், நெடுமை

வாரம் = பங்குமுறை, வட்டக்கடை, வட்டமாகச்சொல்லுகிறகடை

வாரி = = சமுத்திரம்

வாரிப்பிடியாகப் பிடிக்க = ஒருக்காலே பிடிக்க

வாருகை = அதிகமாகை

வால் = வலியது

வாலியது = வலியது

வாள் = காந்தி, அழகு, மிடுக்குவளேறு கொட்டின உபத்திரவம்

வான் = பெருமை, ஆகாசம், மேகம், வலி, அதிசயம்

வானம் = ஆகாசம், மேகம்

வானுவம் = பிரயோஜனம்

விசை = வேகம்

விசைக்கொம்பு = வலித்துவிட்ட கொம்பு

விசைப்பு = அதிசயம்

விஞ்சைவானவர் = வித்யாதரர்

விடுகாது = தோடுவாங்கின காது

விரகர் = சமர்த்தர்

விரகு = உபாயம்

விருவுகை = பரம்புகை

விலங்கல் = மலை

விலங்கு = மான், குரங்கு முதலானவை

விழுது = வெண்ணெய்

விளரி = ஒரு பண், சேறு

விளாக்குலை கொள்ள = கரை புரள

விளி = கூப்பிடுகை

வினை = பாவம்

வினைக்கேடு = காரியக்கேடு

வினையெச்சம் = கிரியா சங்கோசம்

வீடு = விடுகை, கிருகம், மோக்ஷம்

வீரக்கழல் = விருதுக்கழல்

வீவு = நாசம்

வீழ் = விழ, மேல்விழவென்றுமாம்

வீழ்ந்திடங்கிடக்கை = அப்பிரசித்தை

வீறு = அதிசயம், கர்வம்

வெகுண்டு = கோபித்து

வெஞ்சமம் = யுத்தம்

வெப்பம் = துக்கம்

வெப்பி = பயமுறுத்தி

வெருட்டி = மிரட்டி

வெல் = வெல்லுகை, ஜெயிக்கை

வெளிச்சிறப்பு = வைசவ்யம்

வெற்றி = ஜெயம்

வெறுப்பு = கோபம்

வேட்கை = ஆசை

வேட்ட பொழுது = வேண்டின பொழுது

வேண்டப்பாடு = பெருமை

வேதகப்பொன் = தன்னைப்போலே பண்ணும் பொன்

வேரி = பரிமளம்

வேல் = வெல்லுகை, ஜெயிக்கை

வேற்று = வேவுபார்த்து

வேனல் = கிரணம்

வை = கூர்மை

வைகல் = நாள்தோறும்

வைப்பு = நிக்ஷேபம், தனம்